# 2.வத்திக்கான்

உலகின் 17 குட்டி நாடுகளில் முதலிடம் வகிப்பது வத்திக்கான். உலகெங்கும் உள்ள 130 கோடி கத்தோலிக்கக் கிறித்துவர்களின் தலைவரான போப்பாண்டவர் தலைமையில் உள்ள இந் நாடு கோலாலம்பூர் அனைத்துலக விமானநிலைய முதல் டெர்மினலையும், சென்னை கோயம்பேடு காய்கறி அங்காடியையும் விடச் சிறியது.



வத்திக்கான் நாடு

நாடு முழுவதும் நடந்தே செல்லுமளவுக்கு ஓர் இறையண்மையுள்ள 110 ஏக்கர் கடுகு தேசம். நீளம்: 1.05 கி.மீ(0.6மைல்) அகலம்: 0.85 கி.மீ( 0.5 மைல்) ரோம் நகரின் நடுவே மதில் சுவருக்குள், டைபர் நதியின் மேற்கு கரையில் வத்திக்கான் மலையின் மேலே இந்த நாடு அமைந்துள்ளது. இந்நாட்டில் நெடுஞ்சாலைகள் இல்லை; எங்கும் சிறிய தெருக்களே! விமான நிலையம் கிடையாது. ஹெலிகாப்டர் வந்திறங்க ஹெலிபாட் மட்டுமே உண்டு. சிறு ரயில் நிலையத்திலிருந்து, 852 மீட்டர் தூர இருப்புப்பாதையில்(அதில் 300 மீட்டரே வத்திக்கானில்) ரோமின் புனித பீட்டர்ஸ் ரயில் நிலையத்திற்குச் செல்லுகிறது ஒரு ரயில். ஒரே அஞ்சல் குறியீடு(00120) மட்டுமே வைத்துக்கொண்டு, உலகின் மிகச்சிறந்த அஞ்சல்துறை என்று மார்தட்டிக்கொள்கின்றனர்.



வரைபடம்,

கத்தோலிக்கக் குருக்கள், கன்னியர், பாதுகாவலர், பெருமக்கள் என நிரந்தரமாக வாழ்வோர் 900 பேரே. ஆனால் 3000 பணியாட்கள் இங்கு வந்துசெல்கின்றனர். குடியுரிமை பெற்றோரில் 74% குருக்களே. பிறப்பினாலன்றி, இங்குச் செய்யும் பணியால் மட்டுமே குடியுரிமை பெறமுடியும். பணிமுடிந்தால் குடியுரிமை ரத்தாகும். சுற்றலாப்பயணிகள் ஒருநாளைக்குச் சராசரியாக 20,000 பேர் வருகின்றனர்.

இந்தக் குட்டி நாட்டில் போப் உருவம் பதித்த வத்திகான் லிரா என்ற தனி நாணயம் பயன்படுத்துகிறார்கள். யூரோவும் புழக்கத்தில் உள்ளது. ஒரே வங்கியான வத்திகான் வங்கியின் தானியிங்கி எந்திரத்தின் (ATM)பயன்பாட்டு மொழி இலத்தீன். ஆட்சி மொழி : இத்தாலியம், பிரஞ்சு, இலத்தீன். முக்கிய தொழில்: அச்சடித்தல், பதக்கம்,காசு, அஞ்சல் தலை,சீருடை தயாரிப்பு. வெளிநாட்டு மூலதனத்தால் வருமானம் செழிக்கிறது. இத்தாலிய மக்கள் தங்கள் வருமான வரியில் 8% ஐ தங்கள் அரசுக்குத்தருவதற்குப் பதிலாக வத்திக்கானுக்கு நன்கொடையாக வழங்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

ரோமானியப் பேரரசர் காான்ஸ்டன்டைன் கி.பி 313 இல் இந்த இடத்தை மில்டியேட்ஸ் என்ற போப்பாண்டவருக்கு வழங்கினார். அது முதல், படையெடுப்புகளால் இடம்பெய்ர்ந்த சில ஆண்டுகள் நீங்கலாக, 266 போப்புகளில் பலரும் இங்கு தான் கோலோச்சியுள்ளனர்.இத்தாலியின் ஒரு பகுதியாக இருந்த வத்திக்கான், 1929 இல் முசோலினி ஆட்சியில் தனி நாடானது. ஐரோப்பாபில் முடியாட்சியுள்ள ஒரே நாடு இதவே. இப்போதைய போப் பிரான்சிஸ், நாட்டின் சர்வ வல்லமை படைத்த முடிமன்னராக 2013 முதல் ஆள்கிறார். உலகின் அத்தனை கத்தோலிக்கு நிறுவனங்களும்,ஆலயங்களும் அவரின் தார்மீக கட்டுப்பாட்டிற்கு உரியன. கிறித்துவத்தின் தொடக்ககாலத்திலிருந்தே இங்கு நடைபெறும் சமய ஆட்சி **திருப்பீடம்** (Holy See) எனப்படுகிறது. வத்திக்கான் நகர நாட்டிலிருந்து திருப்பீடம் வேறுபட்டது. இரு

ஆட்சியமைப்புகளுக்கும் தனித்தனி கடவுச்சீட்டுகள் உள்ளன.வத்திக்கானின் அரசாணைகள் இத்தாலியமொழியிலும், திருப்பீடத்தின் ஆவணங்கள் இலத்தீனிலும் பிறப்பிக்கப்படுகின்றன.174 நாடுகளுடன் தூதரக உறவு கொண்டிருந்தாலும், தூதரகங்கள் வைக்க வத்திகானில் இடமில்லை. நாட்டுக்கு வெளியே தான் அவை இயங்குகின்றன. ஐநா சபையில் வத்திக்கான் இடம்பெறவில்லை.



பீட்டர்ஸ் பேராலாயச்சதுக்கம்,

அனைவரும் கல்வி கற்றவராயினும் இங்கு ஒரு பள்ளியும் இல்லை. வேளண்மை இல்லை. மின்சாரம்,தொலைபேசிக்கு இத்தாலியைச் சார்ந்துள்ளது. சிறை வைக்க இடமில்லாததால் இத்தாலியச் சிறையில் குற்றவாளிகளை அடைத்து செலவை வத்திக்கான் ஏற்கிறது. நாட்டின் பாதுகாப்பை முழுவதும் இத்தாலி பார்த்துக்கொள்கிறது. ஆனால் நீண்ட காலமாக உள்நாட்டு காவல்துறை சுவிஸ் நாட்டு காவலர்களால் ஆனது.



**சுவிஸ் காவல் படை, படம்**

134 சுவிஸ் காவல் வீரர்களின் தகுதி சாதாரணமானதன்று. உயரம், 175 செ.மீ க்கு மேலுள்ள, 19-30 வயது வரம்புடைய சுவிஸ் குடிமகனாக இருக்கவேண்டும். கத்தோலிக்கராகவும்,

நல்ல பண்புடையவராகவும்,இராணுவ பயிற்சி பெற்றவராகவும் விளங்கவேண்டும்.



போப் பிரான்சிஸ்

இவ்வளவு சிறந்த காவல் படை இருந்தும் உலகின் குற்றங்கள் மிகுந்த நாடுகளில் ஒன்றாக இந்தப் புனித பூமி திகழ்கிறது. இத்தாலியை விட இங்கு 20 மடங்கு குற்றங்கள்! சுற்றுலாத்தளங்கள் பிக்பாக்கெட் காரர்களின் சொர்க்கங்களாகிவிட்டன.1981-இல் போப் இரண்டாம் ஜான்பால் மீதே கொலை முயற்சி நடந்தது. 1982- இல் சிசிலிய போதைக் கும்பலின் 3.5 பில்லியன் டாலர் பணத்தை வங்கியில் உட்புகுத்தி வங்கியே திவாலகச்செய்தவர் மறைத்திரு பால் மர்சியானோ. சுவிஸ் காவல் படைத்தலைவர் அலோயிஸ் ஈஸ்டர்மன் மனைவியுடன் சுவிஸ் காவலரால் கொல்லப்பட்டு தாமும் தற்கொலை செய்துகொண்டது 1998- இல் பரபரப்பானது. இருவரிடையே ஏற்பட்ட ஓரினச்சேர்க்கையே இதற்கு காரணமாகக் கருதப்படுகிறது. 1999-இல் வத்திக்கான் வங்கியே குரோசியாவின் உஸ்டஷா ஆட்சியின் கொள்ளைப்பணத்தைக் கையாண்டு குற்றவாளியானது.



வத்திக்கான் ரயில் நிலையம்

வரலாற்றுப்புகழ்மிக்க புனித பீட்டர்ஸ் பேராலயம், சிஸ்டெர்ன் சிற்றாலயம் முதலியவற்றில் மைக்கிள் ஆங்சலோவின் கைவண்ணத்தைக் கண்டு வியக்கலாம். அறிவுக்கும், காட்சிக்கும் விருந்தளிக்கும் 10 க்கும் மேற்பட்ட மாபெரும் அருங்காட்சியங்களின் மொத்த நீளம் 14.5கி.மீ(9 மைல்). ஒரு படத்தைப்பார்க்க ஒரு நிமிடம் செலவிட்டாலும் இங்குள்ளவற்றைப்பார்த்து முடிக்க 4 ஆண்டுகளாகும்.



சிஸ்டெர்ன் சிற்றாலயம்

நீண்ட வரலாறும், பழச்சின்னங்களும் நிறைந்த இந்த நாடே உலக பாரம்பரிய இடமாக 1984 இல் யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டுள்ளது. (வெற்றி வேந்தன்: செப்டம்பர் *2015)*